This question paper contains 4 printed pages]

Your Roll No..............

248

**B.A. (PROGRAMME)/I J**

TAMIL LANGUAGE (A)—Paper I

*Time : 3 Hours* *Maximum Marks : 75*

*(Write your Roll No. on the top immediately on receipt of this question paper.)*

1. கடிதத்தின் உறுப்புகளைச் சான்றுகளுடன் விளக்கி வரைக. 15

**(அல்லது)**

உங்களுக்குத் தேவையான நூல்களை அனுப்பக் கோரி ஒரு பதிப்பகத்தாருக்குக் கடிதம் ஒன்று வரைக.

2. மரபுத் தொடருக்கும் வளமைத் தொடருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப். புலப்படுத்துக. 5

**(அல்லது)**

உவமைத் தொடர் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

3. பிறமொழிச் சொற்களை எடுத்தாளும் போது கவனிக்க வேண்டியவை யாவை? 5

P.T.O.

(அல்லது)

துறைமொழிச் சொற்களின் வகைகளை விவரிக்க.

4. பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்குச் சுருக்கமான விடை தருக. 15

சங்க காலத்தில் சிற்றரசர்களாய் வாழ்ந்த அதியர் கோமான்கள் சேரரின் கிளைக்குடியினர் என்று கருத இடமுண்டு. அதியர் மகன் என்பது திரிந்தோ, தலைமைச் சிறப்பு உணர்த்தும் மாண் விகுதியை அதியர் என்னும் குடிப்பெயர் பெற்றோ அமைந்த அதியமான் என்ற பெயரை உடைய இந்தக் குடி மன்னரில் பெரும்புகழ் எய்திய அதியமான் அஞ்சியைப் பனந்தார் அணிந்தவனாகக் குறிப்பிடுவார் ஔவையார். ஆனால் பனம்பூமாலை சேரர்க்கே உரியது. எனவே புறநானூற்றின் பழைய உரையாசிரியர் 'இவனுக்குப் பனந்தார் கூறியது, சேரமாற்கு

உறவாதலின்' என்று எழுதினார். மேலும் ஏழு அரசரை வென்று அவர்தம் ஏழு முடிகளை மாலையாக அணிந்தவரென்று சேரர் பாராட்டப்பெறுவதைப் போலவே அஞ்சியும் ஏழு அரசர்க்குரிய இலச்சினை உடையவன் என்று ஔவையால் போற்றப் பெறுகிறான். இது தவிர அதியமானுக்குரிய தகடூர் மீது பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேரமான் படையெடுத்துச் சென்ற வரலாற்றைக் குறிப்பிடும் 'தகடூர் யாத்திரை' சேரமானுக்கு அதியமான் தம்பி முறையினர் என்று கூறுகிறது.

(i) அதியமான் என்ற பெயர் வழங்குவதன் பின்னணியைக் கூறுக:

(ii) 'அதியமான் ஔவையாரால் எவ்வாறு போற்றப்படுகிறான்.

(iii) அதியமானை ஔவையார் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

(iv) தகடூர் யாத்திரை கூறுவது என்ன?

(v) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பைக் கூறி அப்பத்தி கூறும் முக்கிய கருத்துக்களை ஓரிரு வரிகளில் எழுதுக.

5. (அ) எவையேனும் **இரண்டனுக்குக்** 25 கட்டுரை வடிவில் விடை தருக.

(i) தமிழரின் சமய வாழ்வு

(ii) இந்தியாவுக்கு வெளியே தமிழ்ச் செல்வாக்கு

(iii) அம்மானைப் பாடல்கள்

(iv) தமிழர் பண்பாடு

(ஆ) எவையேனும் **இரண்டனுக்குச்** சிறுகுறிப்பு வரைக. $2 \times 5 = 10$

(i) பொருளில்லாச் சடங்குகள்

(ii) கண்ணப்பர்

(iii) அரசியலும் மதமும்

(iv) துளசிதாசரில் கம்பன்